மத்திய தலைமைச் தொழிலாளர் ஆணையாளர், புதுடெல்லி அவர்கள் நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஊதிய விகிதங்கள்
(01-04-2010 முதல் 30-09-2010 வரை)

ஊதிய விகிதம் ஒருநாளில் 8 மணி வேலை நேர அளவிற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஊதியமானது அடிப்படை சம்பளமும், பஞ்சப்படியும், உள்ளடங்கியது.

பஞ்சப்படி ஒவ்வொரு ஆறு மாதத்திற்கு ஒருமுறை மாறுபடும். ஊதிய விகிதத்தில் ஓய்வு நேர ஊதியமும் அடங்கும் 'எ' பிரிவில் சென்னை உள்ளடங்கும் 'பி' பிரிவில் திருச்சி, மதுரை, சேலம், கோயம்புத்தூர், பாண்டிச்சேரி உள்ளடங்கும். 'சி' பிரிவில் தூத்துக்குடி உள்ளடங்கும்.

## 1. சாலை, கட்டிடம் மற்றும் பிறகட்டுமானப் பணிகள்

| தொழில் பெயர் | 'எ' பிரிவு ரூபாய் | 'பி' பிரிவு ரூபாய் | 'சி' பிரிவு ரூபாய் |
|---|---|---|---|
| திறன் இல்லாதவர் / உதவியாளர் (அன்ஸ்கில்டு) | 224.00 | 186.00 | 149.00 |
| பகுதி திறன் பெற்றவர் (செமிஸ்கில்டு) | 248.00 | 211.00 | 174.00 |
| திறன் பெற்றவர் / எழுத்தர் (ஸ்கில்டு) | 273.00 | 248.00 | 211.00 |
| போதிய திறன் பெற்றவர் (ஹெலிஸ்கில்டு) | 297.00 | 273.00 | 248.00 |

## 2. சுத்தம் மற்றும் துப்புரவு பணிகள்

| தொழில் பெயர் | 'எ' பிரிவு ரூபாய் | 'பி' பிரிவு ரூபாய் | 'சி' பிரிவு ரூபாய் |
|---|---|---|---|
| சுத்தம் மற்றும் துப்புரவு வேலை செய்பவர் (கிளீனிங்) | 224.00 | 186.00 | 149.00 |

## 3. பாதுகாப்பு மற்றும் காவல் பணியாளர்கள் (செக்யூரிட்டி)

| தொழில் பெயர் | 'எ' பிரிவு ரூபாய் | 'பி' பிரிவு ரூபாய் | 'சி' பிரிவு ரூபாய் |
|---|---|---|---|
| பாதுகாப்பு மற்றும் காவல் பணியாளர் (துப்பாக்கி இல்லாமல்) | 224.00 | 186.00 | 149.00 |
| பாதுகாப்பு மற்றும் காவல் பணியாளர் (துப்பாக்கியுடன்) | 248.00 | 211.00 | 174.00 |

## 4. பாரம் ஏற்றுபவர், இறக்குபவர் (ரயில்வே துறை, பண்டக காப்பகம், மத்திய தானிய உணவுக்கிடங்கு மையம் மற்றும் துறைமுகம்)

| தொழில் பெயர் | 'எ' பிரிவு ரூபாய் | 'பி' பிரிவு ரூபாய் | 'சி' பிரிவு ரூபாய் |
|---|---|---|---|
| பாரம் ஏற்றுபவர் / இறக்குபவர் | 224.00 | 186.00 | 149.00 |

## 5. கனிமவள நிறுவனங்கள்

| தொழில் பெயர் | நிலத்திற்குமேல் ரூபாய் | நிலத்திற்கு கீழ் / சுரங்கப்பகுதி / ரூபாய் |
|---|---|---|
| திறன் இல்லாதவர் / உதவியாளர் (அன்ஸ்கில்டு) | 149.00 | 186.00 |
| பகுதி திறன் பெற்றவர் (செமிஸ்கில்டு) | 186.00 | 224.00 |
| திறன் பெற்றவர் / எழுத்தர் (ஸ்கில்டு) | 224.00 | 261.00 |
| போதிய திறன் பெற்றவர் (ஹெவி ஸ்கில்டு) | 261.00 | 297.00 |

## 6. வேளாண்மை தொழில்

| தொழில் பெயர் | 'எ' பிரிவு ரூபாய் | 'பி' பிரிவு ரூபாய் | 'சி' பிரிவு ரூபாய் |
|---|---|---|---|
| திறன் இல்லாதவர் / உதவியாளர் (அன்ஸ்கில்டு) | 158.00 | 143.00 | 141.00 |
| பகுதி திறன் பெற்றவர் (செமிஸ்கில்டு) | 173.00 | 160.00 | 146.00 |
| திறன் பெற்றவர் எழுத்தர் (ஸ்கில்டு) | 188.00 | 173.00 | 159.00 |
| போதிய திறன் பெற்றவர் (ஹெலிஸ்கில்டு) | 209.00 | 193.00 | 173.00 |

ஆ) ஒப்பந்ததாரரின் பொறுப்புகள் மற்றும் கடமைகள் :

1. குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தக் கூடாது.
2. மத்திய தலைமை தொழிலாளர் ஆணையாளர் அவர்கள் நிர்ணயித்துள்ளபடி குறைந்தபட்ச ஊதியம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில் பிரிவுகளுக்கு முறையாக ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படல் வேண்டும். அனைத்து தொழிலாளர்களுக்கும் சம்பளச் சீட்டு வழங்கப்படல் வேண்டும்.
3. வேலை செய்யும் இடத்தில் ஓய்வு அறை, உணவு விடுதி, முதலுதவிப் பெட்டி, குடிநீர் வசதி, கழிப்பறை வசதி ஆகியவை செய்து கொடுக்கப்படல் வேண்டும். (பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப)
4. 20 ஒப்பந்தத் தொழிலாளர்கள் அல்லது அதற்குமேல் வேலைக்கு அமர்த்தும் போது வேலை அட்டை கொடுக்கப்படல் வேண்டும்.
5. 10 தொழிலாளர்கள் அல்லது அதற்குமேல் கட்டிடப் பணி மற்றும் பிற கட்டுமானப் பணியில் அமர்த்தும் முன்பு, பதிவு அலுவலர் மற்றும் மத்திய உதவி தொழிலாளர் ஆணையாளரிடம் சான்றிதழ் பெற வேண்டும்.
6. 20 தொழிலாளர்கள் அல்லது அதற்குமேல் எந்த ஒரு ஒப்பந்தத் தொழிலுக்கும் வேலைக்கு அமர்த்தும் முன்பு, சான்றிதழ் வழங்கும் அதிகாரி மற்றும் மத்திய உதவித் தொழிலாளர் ஆணையாளர் அவர்களிடம் சான்றிதழ் பெற வேண்டும்.
7. வேலை இடத்தில் தொழிலாளர்களின் வீட்டு முகவரி விபரங்கள் அடங்கிய பதிவேடு, வருகைப் பதிவேடு, சம்பளப் பதிவேடு, அபராதம் பற்றிய பதிவேடு, மிகைநேர ஊதியம் பற்றிய பதிவேடு, பழுதுகள் பற்றிய பதிவேடு, முன்பணம் பற்றிய பதிவேடு ஆகியவை முறையாக வேலைசெய்யும் இடத்தில் வைத்து பராமரிக்கப்படல் வேண்டும். ஆய்வாளரிடமும் ஆய்வின் போது காண்பிக்கப்படல் வேண்டும்.
8. 20 தொழிலாளர்களுக்கு மேல் வேலைக்கு அமர்த்தும் தொழிலாளர்களுக்கு முதன்மைத் தொழிலதிபர் முன்னிலையில் மட்டுமே சம்பளப் பட்டுவாடா செய்ய வேண்டும். பட்டுவாடா செய்த பின்பு, சம்பளப் பதிவேட்டில் தவறாமல் சான்றிதழ் பெற வேண்டியது ஒப்பந்ததாரின் பொறுப்பாகும். ஆய்வின் போது மத்திய தொழிலாளர் அமலாக்க அதிகாரியிடம் மற்ற பதிவேடுகளுடன் சமர்ப்பிக்க வேண்டும்.
9. ஆய்வாளர்களின் பெயர், முகவரி அடங்கிய அறிக்கை, ஊதிய விகிதம், வேலைப் பிரிவுகள், ஊதியம் வழங்கும் தேதி, இடம் மற்றும் நேரம் அடங்கிய அறிக்கை அனைத்து ஒப்பந்தத் தொழிலாளர்களும் புரிந்து கொள்ளும் மொழியில், அறிவிப்பு பலகையில் குறிப்பிடப்படல் வேண்டும்.
10. அரையிறுதி ஆண்டுக்கான அறிக்கை உரிய படிவத்தில் முறையாக மத்திய உதவி தொழிலாளர் ஆணையாளர் அவர்களுக்கு குறிப்பிட காலக்கெடுவிற்குள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
11. கட்டிடப் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு விபத்து ஏற்பட நேரிட்டால், மத்திய மண்டல தொழிலாளர் ஆணையாளர் அவர்களுக்கு உரிய படிவத்தில் குறித்த நேரத்திற்குள் அனுப்பி வைக்க வேண்டும்.
12. தொழிலாளர் காப்பீட்டு வாரியம் மற்றும் தொழிலாளர் சேமநல வாரியம் மூலம் கிடைக்கும் சலுகைகளை முறையாக ஒப்பந்தத் தொழிலாளர்களக்கு கிடைக்க ஆவண செய்ய வேண்டும். (தொழிலாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப)

# இந்திய அரசு

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சகம்**
**ஒப்பந்தத் தொழிலாளர் சட்டங்கள் அமலாக்கம்-ஆய்வாளர்களின் குழு ஆய்வு**

தேதி : 19-04-2010 முதல் 24-04-2010 வரை,

இடம் : தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி முழுவதும்

தலைமை : **திரு. வி.ஜே. மாத்யூவ்,**

துணை தலைமைச் தொழிலாளர் ஆணையாளர் (மையம்)
5வது தளம், சாஸ்திரி பவன், சென்னை-600 006.
தொலைபேசி : 044-2827 7241, 2827 7955, 2822 0196

## ஒப்பந்தத் தொழிலாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களின் பார்வை மற்றும் கவனத்திற்கு

(அ) ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய சட்ட ரீதியான உரிமைகள் மற்றும் சலுகைகள்.

1. மத்திய தலைமைத் தொழிலாளர் ஆணையாளர், புதுடெல்லி அவர்கள் நிர்ணயம் செய்துள்ளபடி குறைந்தபட்சம் ஊதியம் வழங்கப்பட வேண்டும் (பணிவாரியாக ஊதியம் -அட்டவணையில் கண்டுள்ளபடி)
2. வாரச் சம்பளம் பிரதி சனிக்கிழமையிலும் மாதச் சம்பளம் வரும் மாதம் 7ம் தேதிக்கு முன்பும் சம்பளச் சீட்டுடன் வழங்கப்பட வேண்டும்.
3. 8 மணி நேரத்திற்கு மேல் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு, மிகைநேர ஊதியம் இரட்டிப்புத் தொகையாக வழங்கப்பட வேண்டும்.
4. வாரத்தில் ஒருநாள் ஓய்வு விடுமுறை அளிக்கப்பட வேண்டும்.
5. வேலை செய்யும் இடத்தில் ஓய்வு அறை, உணவு விடுதி, முதலுதவிப் பெட்டி, குடிநீர் வசதி, கழிப்பறை வசதிகள் செய்துக் கொடுக்கப்பட வேண்டும். (பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப)
6. ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு வேலை அட்டை கொடுக்கப்படல் வேண்டும். (குறைந்தது 20 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் பட்சத்தில்)
7. கட்டிடப் பணியில் பணிபுரிபவர்களுக்கு பாதுகாப்பு தலைக்கவசம், பாதுகாப்பு காலணி, பாதுகாப்பு நாடா வழங்கப்படல் வேண்டும். மேலும் மருத்துவர்களால் பொது மருத்துவப் பரிசோதனை வசதி செய்து கொடுக்கப்படல் வேண்டும்.
8. ஒரே வேலை செய்யும் ஆண் தொழிலாளர்களுக்கும், பெண் தொழிலாளர்களுக்கும் சரிசமமான ஊதியம் வழங்கப்படல் வேண்டும்.